

கும்பகோணத்தில் நேற்று (28.1.2026) நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் மஹல்லா ஜமாஅத் ஒருங்கிணைப்பு மாநில மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



கும்பகோணத்தில், நேற்று (28.1.2026) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து, கணினி அறிவியல் - உடற்கல்வியியல் (இருபுலச்சார்பு) பாடத்தில் ஆய்வு மேற்கொண்டதற்காக பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட முனைவர் பட்டத்தை காண்பித்து வாழ்த்து பெற்றார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டு போட்டிகளில் பீச் வாலிபால் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு வீராங்கனைகள் க.தீபிகா, சு.பவித்ரா, ம.சுவாதி, அ.தர்ஷினி மற்றும் வீரர்கள் வி.ராஜேஷ், சோ.பரத், செ.அபிதன், உ.பூந்தமிழன் ஆகியோர் நேற்று (28.1.2026) சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.1.2026) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவும், விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காகவும் மொத்தம் 7.85 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.



கழக இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.1.2026) சென்னை குறிஞ்சி இல்லத்தில், திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஜி.பி.பி.பிரவீன் குமார் – ஆர்.பார்வதி இணையரின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்.

## தமிழ்நாட்டு மகளிரின் வளர்ச்சியை அடுத்த கட்டத்துக்கு

# ‘தமிழ்நாடு வீ சேஃப்’ திட்டம் நிச்சயம் எடுத்துச் செல்லும்!

## சென்னையில் நடைபெற்ற உலக மகளிர் உச்சி மாநாட்டில் – (She Leads)

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

***சென்னை,ஜன.29-***

***சென்னை, வர்த்தக மையத்தில் நடைபெற்ற உலக மகளிர் உச்சி மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள், த.நா வீ.ஷேப் (TN We Safe) எனும் மகத்தான திட்டத்தை நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். இதையொட்டி நேற்று நடைபெற்ற ஷி லீட்ஸ் (She Leads) நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வாழ்த்திப் பேசினார்.***

***அபோது அவர், ``தமிழ்நாட்டு மகளிரின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல, இந்த தமிழ்நாடு வி.சேப் திட்டம் துணையாக இருக்கும் என நம்புகிறோம். இதற்காக உதவிய உலக வங்கி மற்றும் பணியாற்றிய அனைத்து அதிகாரிகளுக்கும் எனது நன்றி. இந்த திட்டத்தால் பயனடைந்த அனைத்து மகளிருக்கும் வாழ்த்துகள்” என்று குறிப்பிட்டார்.***

***துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:***

*அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்.*

*இன்று இந்த ‘ஷி லீட்ஸ்’ (SHE LEADS) மாநாட்டின் நிறைவுப் பகுதிக்கு வந்துள்ளோம். இந்த இரண்டு நாள் மாநாட்டில் பல்வேறு தலைப்புகளில் பல்வேறு தலைவர்கள் மற்றும் தொழில்முனைவோர் பேசியுள்ளனர். அவர்கள் தங்களின் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இங்கு கையொப்பமிடப்பட்டுள்ளன. எனக்கு முன்பாக மகளிர் சுயஉதவிக்குழுவைச் சேர்ந்த இரண்டு சகோதரிகள் இங்கு உரையாற்றினார்கள்.*

### ஜெர்மனியில் ஆடை கண்காட்சி

*ஈரோடு மாவட்டம், ரங்கம்பாளையம், பிரம்மக்கமலம் மகளிர் சுயஉதவிக்குழுவைச் சேர்ந்த சகோதரி சுதா பெரியசாமி அவர்கள், மகளிர் திட்டத்தின் மூலம் ஆடை விற்பனை செய்து, அதனுடன் தொடர்புடைய பல படிப்புகளைப் பயின்று, இன்று அரசின் உதவியுடன் ஜெர்மனி வரை சென்று ஆடை கண்காட்சியில் (Garments Expo) கலந்துகொண்டு தமிழ்நாட்டு மகளிருக்கு மிகப்பெரிய பெருமையைச் சேர்த்துள்ளார். சகோதரி சுதா இன்று ஆண்டுக்கு 20 லட்சம் ரூபாய் வரை வருவாய் ஈட்டி வருகிறார். அவருக்கு நம் அனைவரின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.*

*அதேபோல், நீலகிரி ஸ்டார் மகளிர் குழுவைச் சேர்ந்த சகோதரி சௌமியா அவர்கள் தனது வெற்றிக் கதையைப் பகிர்ந்துகொண்டார். 52 லட்சம் ரூபாய் வங்கிக் கடன் பெற்றுத் தொழிலைத் தொடங்கி, இன்று தாள் தூய்மி (Tissue paper) விற்பனையில் ஆண்டுக்கு 25 லட்சம் ரூபாய் வரை வருமானம் ஈட்டி வருகிறார். அவருக்கும் வாழ்த்துகள்.*






*இந்த தமிழ்நாடு விசேப் திட்டம், வருங்காலத்தில் உங்களில் இருந்து பல சுதாக்களையும் சௌமியாக்களையும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் உருவாக்கப்பட்ட திட்டமாகும்.*

### முற்போக்கான மாநிலம்

*தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எப்போதும் எல்லா விஷயங்களிலும் முன்னோடியாகவும் முற்போக்கு மாநிலமாகவும் திகழ்ந்து வருகிறது. குறிப்பாக, மகளிர் மேம்பாட்டில் மிக மிக முற்போக்கான மாநிலம் நம் தமிழ்நாடு. பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என்று இருந்த நிலை, நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தது. ஆனால், இன்று இந்தியாவிலேயே தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 43 விழுக்காட்டினர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.*

*ஆண்பெண் என்ற ஏற்றத்தாழ்வைத் திராவிட மாடல் ஆட்சி உடைத்துள்ளது. இன்று பெண்கள் பல துறைகளில் ஆண்களை விட வேகமாக முன்னேறி வருகின்றனர். ஒரு காலத்தில் அலுவலகங்களில் பெண்களைவிட ஆண்கள் அதிகமாக இருப்பார்கள். ஆனால் இன்று, சில அலுவலகங்களில் ஆண்களுக்கு இணையாகவும், சிலவற்றில் ஆண்களை விட அதிகமாகவும் பெண்கள் உள்ளனர். இதுவே மாற்றம் மற்றும் முன்னேற்றம். இந்த மாற்றத்தை, முன்னேற்றத்தை உருவாக்கியது திராவிடத் தலைவர்கள், நம் திராவிட இயக்கம், நம் திராவிட மாடல் அரசு. இந்த மாற்றத்திற்கு அடித்தளமிட்டவர் தந்தை பெரியார் அவர்கள். அதைச் செயல்படுத்தியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதைத் தொடர்ந்து நிலைநாட்டியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.*

*உதாரணமாக, இந்தியாவிலேயே முதன்முதலாகப் பெண் காவலர்களை அறிமுகப்படுத்தியது தமிழ்நாடும் டாக்டர் கலைஞர் அவர்களும்தான். அதேபோல், பள்ளிக்கூட ஆசிரியர் பணிகளில் பெண்களை அதிக அளவில் நியமித்தவர் டாக்டர் கலைஞர். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் முழுவதுமாக பெண்கள்தான் இருக்க வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்து அதை செயல்படுத்தியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.*

### கலைஞர் அவர்கள்தான்

*இன்று கிராமப்புறப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்கியவரும் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். பெண் சிசுக்கொலை இன்று முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது. ஆண் குழந்தைகளைவிட, பெண் குழந்தைகளை மகிழ்ச்சியாக கொண்டாடும் சமூகமாக, நம் தமிழ் சமூகம் மாறியுள்ளது.*

*ஒரு காலத்தில் `ஆசைக்கு ஒரு பெண், ஆஸ்திக்கு ஒரு ஆண்’ என்ற பழமொழி இருந்தது. செல்லமாக வளர்ப்பதற்காக பெண் குழந்தையும், தன் சொத்துகளை எழுதி வைக்க ஆண் குழந்தையும் என்ற வழக்கம் இருந்தது. அதை மாற்றி, 25 ஆண்டுகளுக்கு முன்பே குடும்பச் சொத்தில் பெண்களுக்குச் சம உரிமை உண்டு என்ற சட்டத்தைக் கொண்டு வந்தவர் டாக்டர் கலைஞர். இன்று அந்தப் பழமொழி பழைய மொழியாகி தமிழ்நாட்டில் காணாமல் போய்விட்டது.*

### மகளிர் உரிமைத் தொகை

*இன்று அந்த வழியில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். ஆட்சி பொறுப்பேற்றபோது, அவரது முதல் கையெழுத்தே பெண்களுக்கான ‘விடியல் பயணத் திட்டம்’ ஆகும். இதன் மூலம் ஒவ்வொரு மகளிரும் மாதம் 800 முதல் 900 ரூபாய் வரை சேமிக்கின்றனர். இன்று இந்த திட்டத்தைப் பார்த்து பல மாநிலங்கள் அவர்களின் மாநிலங்களில் செயல்படுத்தியுள்ளனர்.*

*அதேபோல், உயர்கல்விக்காக ‘புதுமைப் பெண் திட்டம்’ மூலம் அரசுப் பள்ளியில் பயின்று கல்லூரியில் சேரும் பெண்களுக்கு மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் மூலம் ஒரு கோடியே 30 லட்சம் மகளிர் பயன் பெறுகின்றனர். மேலும், வயதான பெண்களுக்கு ‘தாயுமானவர் திட்டம்’, ரேசன் பொருட்கள் வீடு தேடி வரும் திட்டம், அன்புக் கரங்கள் திட்டம் எனப் பல திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.*

*இந்தியாவிலேயே முதல் முறையாக 9 முதல் 14 வயது வரையிலான சிறுமிகளுக்குக்கு, இலவச கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசித் திட்டத்தைத் செயல்படுத்தியதில் இந்த அரசு மிகவும் பெருமை அடைகிறது.*

*தமிழ்நாட்டு மகளிரின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல இந்த தமிழ்நாடு வி.சேப் திட்டம் துணையாக இருக்கும் என நம்புகிறோம். இதற்காக உதவிய உலக வங்கி மற்றும் பணியாற்றிய அனைத்து அதிகாரிகளுக்கும் எனது நன்றிகள். இந்த திட்டத்தால் பயனடைந்த அனைத்து மகளிருக்கும் வாழ்த்துகள். திராவிட மாடல் அரசும் முதலமைச்சரும் மகளிர் முன்னேற்றத்துக்காக துணையாக இருப்பார்கள். நீங்களும் அவருக்குத் துணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.*

*இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்*



திருப்பூர் மாவட்டம், பெருந்தொழுவில், ரூபாய் 5.19 கோடியில் அமைக்கப்பட்டுள்ள M/s. BVK Knits Park LLP ஜவுளிப் பூங்காவை அமைச்சர்கள் மு. பெ. சாமிநாதன், ஆர். காந்தி, திருமதி என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நேற்று (28.01.2026) திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வில், துணிநூல் துறை ஆணையர் திருமதி இரா. லலிதா, திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மணிஷ் நாரணவரே, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில், நேற்று (28.01.2026) ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் ஆகியோர் ”உலகம் உங்கள் கையில் திட்டத்தின்கீழ் தனியார் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணவ/மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கினார்கள்.